**சத்தியமங்கலம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : முனைவர் நா.சிவக்குமார்** *M.Sc.,M.Phil.,Ph.D.,* **முதல்வர்**(மு.கூ.பொ)

**ந.க.எண். 1740 / அ / 2023 நாள் : 30.06.2025**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - கல்லூரிக் கல்வித் துறை - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் - நேரடி நியமனம் திருமதி. மு.சந்திரலேகா - 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலமாக தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1.சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்: 35681/பி1/2023, நாள்: 23.11.2023 உடன் இணைத்து பெறப்பட்ட சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் செயலாளர் அவர்களின் கடித ந.க.எண்: 1926/PSD-D2/2023, நாள்: 04.09.2023

2.இதே ந.க.எண்ணிட்ட இவ்வலுவலக கடித நாள்: 27.11.2023

3.சென்னை-15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்: TNDCE/4777/2025-B1, நாள்: 26.06.2025

*****

**ஆணை:**

பார்வை 1 மற்றும் 2 இல் காணும் கடிதங்களின்படி, திருமதி மு.சந்திரலேகா என்பார் 29.11.2023 முற்பகல் முதல் இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3 இல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கல்லூரிக் கல்வித் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்கள்/சுருக்கெழுத்து தட்டச்சர்கள்(நிலை III) ஆகியோருக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் பார்வையில் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரது கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 10 - இன் கீழ் கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால், கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே சார்ந்த பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி மு.சந்திரலேகா என்பாருக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 29.11.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**"இப்பணி வரன்முறை தொகுதி - IV பணி நியமனம் தொடர்பாக, நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பின் அவ்வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது."**

30/06/2025

முதல்வர்

**முதல்வர் (மு.கூ.பொ)**
**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

பெறுநர்: திருமதி. மு.சந்திரலேகா,
இளநிலை உதவியாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்
ஈரோடு - 638 401.

நகல்: 1. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15
- அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கோவை மண்டலம், கோவை - 18
- அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

3. கோப்பு